# DAILY BUZZ

CIFF

In Association With THE HINDU

Powered By தி இந்து

With the support of Government of Tamil Nadu

## 14TH Chennai International Film Festival

09th Jan 2017


There's no dearth of good cinema as far as the 14th edition of the Chennai International Film Festival is concerned. Day 5 also promises a lot for aficianados. To begin with, the script of the Polish film, United States of Love won the Silver Bear for its director Tomasz Wasilewski at the 2016 Berlinale film festival. The fall of communism in Poland is retold through the eyes of four women struggling to find their place in the new world order in this account of history.



Another must-watch is French film, Things to Come, which won its director Mia Hansen-Løve the Silver Bear at Berlinale 2016 film festival. In an earlier media interview, the director Hansen-Løve said that the central character, Nathalie was wrote with actor Isabelle Huppert in mind. Further, she said that the character of Nathalie was loosely based on her own mother who was a philosophy professor who separated from her husband later in life.

Whether or not you are a morning person, don't fail to catch former chief minister J Jayalalithaa's iconic 1973 blockbuster Suryagandhi at Casino at 10am. Directed by Muktha Srinivasan, the film that spans 152 minutes was highly appreciated for bringing to fore the acting prowess of Jayalalithaa.

Among the other picks of films for the day is Tamil films Uriyadi and 24. The finer points to note in Uriyadi is its screenplay and stunt sequences while 24 starring actor Suriya in a triple role is an absolute delight for his die-hard fans.

## The Salesman



The film won Best Actor and Screenplay at Cannes 2016. In September last year, the film was selected as the Iranian submission for Best Foreign Language Film for the 89th Academy Awards that is scheduled to take place this year. Last December, it made it to the shortlist of nine films considered foreign films category.

### Pic(k) of the Day

The Salesman |Forushande
Dir.: Asghar Farhadi
Iran |2016 |125 - WC

Palazzo Screen 7
9th January 2017 | 7.00 p.m

The Salesman tells the story of a young couple Emad and Rana who play the lead roles in this local rendition of Arthur Miller's Death of a Salesman. Meanwhile, their personal relationship takes a hit after moving into a house that was previously inhabited by a woman who allegedly pursued a career in prostitution.

The film is known to have gotten high appreciation - 100% "fresh" rating on review aggregator website Rotten Tomatoes, based on 10 reviews with a weighted average score of 6.3/10.

# Screening Schedule

**9th January 2017, Monday**

| Venue | | | | | |
|---|---|---|---|---|---|
| Palazzo Screen 7 | 10.00 a.m. The Choice \|La Scelta<br>Dir.: Michele Placido<br>Italy \|2015 \|86 - WC | 12.00 Noon The Unknown Girl<br>La Fille Inconnue<br>Dir.: Jean-Pierre Dardenne<br>Belgium \|2016 \|113 - WC | 2.30 p.m. Things To Come<br>Dir.: Mia Hansen-Løve<br>France \|2016 \|102 - WC | 4.40 p.m. Afterimage \|Powidoki<br>Dir.: Andrzej Wajda<br>Poland \|2016 \|98 - WC | 7.00 p.m The Salesman \|Forushande<br>Dir.: Asghar Farhadi<br>Iran \|2016 \|125 - WC |
| Russian Cultural Centre | 9.30 a.m. They Will Return<br>Eles Voltam<br>Dir.: Marcelo Lordello<br>Brazil \|2012 \|100 - CFB | 11.30 a.m. Pinky Beauty Parlour<br>Dir.: Akshay Singh<br>Hindi \| 2016 \| 127'\|IP | 2.00 p.m. Uturn<br>Dir.: Pawan Kumar<br>Kannada \| 2016 \| 121'\|IP | 4.00 pm Uriyadi<br>Dir.: Viyay Kumar B<br>Tamil \| 2016 \| 87' – TFFC | 6.30 pm 24<br>Dir.: Vikram K Kumar<br>Tamil \| 2016 \| 164 – TFFC |
| RKV Film and Television Institute Auditorium | 10.00 a.m. Emilie \|Emilie<br>Luxembourg \|2013 \|16– CFL<br>Schacko Klack<br>Luxembourg \|1989 \|90– CFL | 12.00 Noon Twa-Tiu-Tiann \|<br>Twa-Tiu-Tiann<br>Dir.: Tien-Lun Yeh<br>Taiwan \|2014 \|133 | 2.30 p.m. Center of my world<br>Die Mitte der Welt<br>Dir.:Jakob M. Erwa \| Germany<br>& Austria\|2016\|115 – NTG | 4.30 p.m. More Than I Can Recognize<br>Dir.: Allan Ribeiro<br>Brazil \|2015 \|82- CFB | 7.15 p.m. Born In 1987 \|Born In 1987<br>Dir.: Majid Tavakkoli<br>Iran \|2016 \|80 – CFI |
| Casino | 10.00 a.m. Suryagandhi<br>Dir.:Mukhta Srinivasan 1973 \| Tamil \| 152 -SS | | 2.30 p.m. Night Train \|Pociag<br>Dir.: Jerzy Kawalerowicz<br>Poland \|1959 \|99 –<br>MSCMPC | 4.40 p.m. Proof Of Innocence<br>Dir.: Kwon Jong-kwan<br>Japan \|2016 \|120 -WC | 7.00 p.m 6 Hours: The End \|6 Horas<br>Dir.: Diego Ayala<br>Chile \|2015 \|67 -WC |
| Inox 2 | 10.15 a.m. In Between \|Bar Bahr<br>Dir.:Maysaloun Hamoud<br>Israel \|2016 \|96 -WC | 12.15 p.m. Holy Biker \|Reza A Lenda<br>Dir.: Homero Olivetto<br>Brazil \|2016 \|87 -WC | 2.30 p.m. Lantouri \|Lantouri<br>Dir.: Reza Dormishian<br>Iran \|2016 \|115 - CFI | 4.30 p.m United States Of Love \|<br>Zjednoczone Stany Milosci<br>Dir.: Tomasz Wasilewski<br>Poland \|2016 \|104 -WC | 7.15 p.m. After The Storm \|<br>Umi Yori Mo Mada Fukaku<br>Dir.: Hirokazu Koreeda<br>Japan \|2016 \|117 -WC |
| Inox 3 | 10.00 a.m. Fast Convoy \|Le Convoi<br>Dir.: Frédéric Schoendoerffer<br>France \|2016 \|102 -WC | 12.00 Noon Bittersweet \|Bittersub<br>Dir.: Krishna Ashu Bhati<br>Germany \|2016 \|95 -WC | 2.15 p.m. Tamara \|Tamara<br>Dir.: Elia Schneider<br>Venezuela \|2016 \|90 -WC | 4.30 pm A Stormy Summer Night<br>\|Orage<br>Dir.: Fabrice Camoin<br>France \|2015 \|83 -WC | 7.00 p.m. Sand Storm \|Sufat Chol<br>Dir.: Elite Zexer<br>Israel \|2016 \|87 -WC |

Country Focus Brazil: CFB | Country Focus Luxembourg: CFL | Country Focus Iran: CFI | Today's Talents from France: TTF
Asian Film Awards Academy: AFAA | New Talents from Germany: NTG | Martin Scorsese presents Masterpieces of Polish Cinema: MSCMPC Indian Panorama: IP | Tamil Feature Film Competition: TFFC | Special Screening – SS | World Cinema: WC

**Screening Schedule is subject to change**

## FILM GENRE

FILM GENREs, as per the standard definition, are various forms or classifications for instantly recognizable patterns like content and subject matter of the film.

They are, among many, as per the most popular classifications, ACTION / ADVENTURE / COMEDY / DRAMA / ROMANCE / HORROR / HISTORY etc or DOCUMENTARY / DOCUFEATURE / SHORT etc. Most of the film sites indicate under the caption of the film the genre along with other details of the film like: Title / Year / Genre / Country / Duration.

**MY TAKE........** One can always Google for the various categories and sub-categories of film genres.

The genre helps the viewer in choosing the type of film one is interested in. This can found, for example, in sites like IMDB (Internet Movie Data Base), Netflix etc. along with the film title.

Sometimes there could be overlap of genres in one and the same film like in a predominantly billed as an Action film, there could be Drama or in any Adventure film, there could be History etv. Thus when making a film, the film maker decides initially the genre in which he wants to make the film and gets a overlap. In my experience, such overlaps adds a new and welcome dimension and makes the film more interesting for the viewer.

Above are a few thoughts on Film Genre and more can be found in film literature and movie sites.



(V Srinivasan, M.A., B.Com., M.B.A.)
Jt. Sec., ICAF / Jt. Dir., CIFF)

## PIC Corner



# 'உறியடி' எனும் கெத்து சினிமா!

## ரஷ்ய கலாச்சார மையம் | பிற்பகல் 4:00

தமிழில் அழுத்தமானதும் விறுவிறுப்பானதுமான 'பொலிட்டிக்கல் த்ரில்லர்' படம் அரிதினும் அரிது. அப்படி ஓர் அரிதான படைப்பு 'உறியடி'. இப்படம் பேசும் மாணவர் - சாதி அரசியலை சில விமர்சகர்கள் ஆபத்து என்கிறார்கள். ஓரளவு சொகுசான வாழ்க்கை கிடைக்கப்பெற்றவர்கள், பாதுகாப்பான சூழல் வாய்க்கப்பெற்றவர்கள் காந்திய சிந்தனை



நோக்கிப் போவதில் வியப்பு இல்லை. ஆனால், உள்ளூர் அளவில் ஆபத்தான சாதி அரசியல் பின்னணி கொண்ட சூழலில் வாழும் சாமானியர்களுக்கு காந்தியம் என்பது நசுக்காமல் திண்ணத்தகுந்த பூந்தியம்தான் என்பது அவர்களுக்குத் தெரியுமா?

சாதிப் பின்னணியில் தமிழ் சினிமா எடுக்கும் மூத்த படைப்பாளிகள் எல்லாம், அந்தச் சாதிகளின் பெருமையைப் பேசி, போகிற போக்கில் ஒரு கருத்துச் சொல்லிவிடுவதுதான் இங்கே நடக்கிறது. பெருமைக்கு மட்டுமே சாதியைத் தொட்டுக்கொள்ளும் தமிழ் சினிமா சூழலில், சாதி அரசியலின் வேர் குறித்து பதிவு செய்து, அதை சினிமா மொழியில் மிகச் சிறப்பாக காட்டியிருக்கும் துணிச்சலும் நேர்மையும் மெச்சத்தக்கது. வன்முறை நிறைந்த சாதி அரசியலை வன்முறை மூலமாகவே எதிர்கொள்ள வேண்டுமா என்று விவாதிக்கத்தான் வேண்டுமே தவிர, அப்படிக் காட்டியதை மட்டமாக நினைப்பது மொக்கை சிந்தனை. உறியடியில் வருகின்ற ஒரு முக்கியமான காட்சியில், சாதிக் கட்சியினர் போட்டும் சில ஆயிரம் வாக்குகளின் 'கணக்கு' ஒன்றே போதும், 'லெட்டர் பேடு' கட்சிகள் என்று பெரிதாக நம்மால் கண்டுகொள்ளப்படாத சாதிக் கட்சிகளால் நமக்கு நேரக் கூடிய பேராபத்தை!

சிலர் 'உறியடி'யில் அளவுக்கதிகமான வன்முறையை ஜீரணிக்க முடியவில்லை என்கிறார்கள். ஃபேன்டசி தன்மையுடன் ஹீரோயிஸம் - பஞ்ச்களைப் புகுத்தி கிராஃபிக்ஸ் சண்டைகளைக் காட்டி ரசிகர்களை வாய்ப்பிளக்க வைத்த சினிமாக்காரர்களின் தாக்கம் இதுதான். ஒரு சமூகத்தில் அன்றாடம் நிகழும் வன்முறையை அப்படியே காட்டுவது ஜீரணிக்க முடியாமல் போய்விடுகிறது. பெரிய இயக்குநர்களிடம் கூட இப்படிப்பட்ட இயல்பான வன்முறைக் காட்சிகளைப் பார்த்தது இல்லை. மாணவர்கள், இளைஞர்கள் வன்முறையில் இறங்குவதை சாடுகிறார்கள் சிலர். உறியடியை நன்றாகப் பாருங்கள். மாணவர்கள் வம்புக்குப் போகவில்லை. அடிக்கும்போது திருப்பி அடிக்கிறார்கள். பழிவாங்குகிறார்கள். பொத்திக்கிட்டுப் போகாத கெத்துத்தனம் அது. அரிவாளுடன் சுற்றுவோர் நிறைந்த சமூகத்தில் தற்பாதுகாப்புக்கு ரௌத்திரம் பழக வேண்டியது கட்டாயம்.

அப்புறம், 'ஓவரா குடிக்கிறாய்ங்க' என்கின்றனர் சிலர். என்னடா இது? மதுப் பழக்கம் தப்பா? ஒரு சமூகத்தில் தண்ணீரைப் போல் மது தாராளமாகக் கிடைப்பதுதான் தப்பு. மதுவின் அவெய்லபிலிட்டியை நெறிப்படுத்தும் அரசிடம் தான் பொறுப்பு இருக்க வேண்டும். மது அருந்தும் பழக்கம் உள்ளவர்கள் எல்லாம் கெட்டவர்கள் என்ற மொக்கையான பொதுபுத்தி நம் சமூகத்தில் இருக்கிறது. ஆனால், மதுப் பழக்கம் உள்ள இயல்பான இளைஞர்களிடம்தான் சக மனிதர்கள் மீதான அக்கறையும், சமூக நலன் மீதான விருப்பமும் மேலோங்கியிருப்பதை நேரடியாகவே பார்த்திருக்கிறேன். இதுதான் இயல்பு. இயல்பு மீறியதையே இயல்பாக நம்பிக்கொண்டிருக்கும் சமூகத்தில் இயல்பானதைக் காட்டினால் அதை இயல்பு மீறல் என்று சொல்வது இயல்புதானே?!

சாதி அரசியலைத் தோலுருத்திக் காட்டினாலும் வன்முறை, குடி என்று முழுக்க முழுக்க நெகட்டிவ் தன்மை நிறைந்திருக்கிறது என்று உறியடியை குறைகொள்வோரைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. நல்ல சினிமா என்பது வெறும் பாசிட்டிவ் ஐட்டங்களை அடுக்கும் ஆன்மிகம் என்பது இவர்களது பார்வை. அப்படிப் பார்த்தால், உலக சினிமா ரசிகர்களாலும் விமர்சகர்களாலும் கொண்டாடப்படும் 'ஆரண்ய காண்டம்' போன்ற படங்கள் மோசமானவையே.

இளம் சினிமா படைப்பாளிகளுக்கும், திரைப்பட மாணவர்களுக்கும் அவ்வப்போது 'டிப்ஸ்' வழங்கும் மூத்த படைப்பாளிகளுள் ஒருவர் அனுராக் காஷ்யப். மிகக் குறைந்த பட்ஜெட்டில் இன்டென்ஸான திரைப்படத்தை எடுப்பதற்கு ஊக்கம் அளிப்பார். கதைக்களம் முதலானவற்றை இயன்றவரையில் சுருக்கிக்கொண்டு, காட்சியமைப்புகள் - கன்டென்ட்டில் முழு கவனம் செலுத்தி நிறைவான படத்தைத் தர முடியும் என்று சொல்வார். இதற்கு கச்சிதமான முன்னுதாரணமாக, தமிழ் சினிமா ஆர்வலர்கள் கவனிக்க வேண்டிய படைப்பாகவும், எல்லா தரப்பு ரசிகர்களையும் மனநிறைவு கொள்ளச் செய்யும் படைப்பாகவும் 'உறியடி' இருக்கிறது.

சினிமாவில் கதைக்கு தேவையெனில் நீளம் ஒரு பிரச்சினையே இல்லை. அப்படி ஓர் அவசியம் ஏற்படாத நிலையில், பொதுவாக ஒரு படம் 90-ல் இருந்து 120 நிமிடத்துக்குள் இருந்தாலே போதும். அதுதான், அப்படத்தின் மீது ரசிகர்கள் முழு ஈடுபாடு காட்டுவதற்கு மிகச் சரியானது என்று நம்புகிறேன். அந்த வகையில், 'உறியடி'யின் நீளம் கச்சிதம். பொறியியல் கல்லூரியின் ஒரு வகுப்பறை, கல்லூரியின் வாசல், நெடுஞ்சாலை தாபா, ஒரு லாட்ஜ், உள்ளூர் அரசியல்வாதி புழங்குமிடம் ஆகிய மிகக் குறைந்த களங்களில் வலுவான திரைக்கதை மூலமும், காட்சிப்படுத்துவதில் புதிய உத்திகளைப் புகுத்துவதன் மூலமும் பார்வையாளருக்கு விறுவிறுப்பான அனுபவத்தைத் தந்திருக்கிறது உறியடி.

தமிழ் திரைத்துறையில் ப்யூர் சினிமாவை ஒரு சிலர் எடுப்பதால் மட்டுமே பெரிய மாற்றம் வந்துவிடப்போவதில்லை. மாறாக, உறியடி போல் உருவாகும் படங்களை ஆதரித்து மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் ப்யூர் சினிமா மேக்கர்கள் ஒன்றிணைய வேண்டும். இதை ஓர் இயக்கம் போலவே செய்தால்தான் மாற்றம் சாத்தியமாகும். இல்லையென்றால், ஓபனிங் மாஸ் என்ட்ரி சாங், 'ஏ'டாகூட காமெடிகள், அபத்தமான பாடல் காட்சிகள், ஓவர் டோஸ் காதல்கள், அப்படி இப்பிடி மேட்டர்கள், பஞ்ச்கள், விண்ணில் பறக்கும் ஆக்‌ஷன்கள், அரைத்தமாவுக் கதைகள்... இதுபோன்ற மசாலாத்தனங்களுடன் கூடிய தமிழ் சினிமாவையே பார்த்துப் பார்த்து பழக்கிவிடும் ரசிகர்கள், எப்போதாவது நல்ல சினிமா வந்து பார்க்க நேரிட்டால் அது தரும் அழுத்தத்தை தாங்க முடியாத நிலைக்குத் தள்ளப்படுவர்.

தமிழ் சினிமாவில் 'பொலிட்டிக்கல் த்ரில்லர்' என்பதே அரிது. இந்த வகையில் உருப்படியான படம் என்பது அரிதினும் அரிது. இந்த வெற்றிடத்தை தமிழ் சினிமா 2016-ல் கெத்தாக நிரப்பிய படைப்பு 'உறியடி'. புது முயற்சி, நம்பிக்கை நட்சத்திரம், சிறந்த முதல் படைப்பு முதலான பிரிவுகளில் சேர்த்து இப்படத்தை உருவாக்கியவர்களைக் கொண்டாடி, அவர்களை சற்றே குறைவாக எடைபோடுவது அபத்தம். மூத்த படைப்பாளிகளே தடுமாறும்போது இந்த இளம் அணி செமத்தியான படம் கொடுத்திருப்பதால் இவர்களை ஒரே தராசில்தான் வைத்துப் போற்றவேண்டும்.

உறியடியை செதுக்க பின்னணியில் இருந்தவர்களும், அதை மக்களிடம் பரவலாக கொண்டு சேர்த்தவர்களும் இங்கே கவனிக்கத்தக்கவர்கள். என்னைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டின் கெத்து சினிமா என்றால் அது 'உறியடி'தான். அதேபோல், சமூக வலைதளங்களில் பரவலாக பேசி, திரையரங்கில் பார்க்க முடியாமல் இப்படத்தை டவுன்லோடியாவது பலரும் பார்த்துக் கொண்டாடிய வகையில், நல்ல சினிமாவின் மீதான தாகம் நம் ரசிகர்களிடம் நிறைந்திருப்பதையும் உணர முடிந்தது.



சரா சுப்ரமணியம்

# தவறவிடாதீர்...

## யூ-டர்ன்: விதிகளை மீறும் அனைவருக்கும்..!



ரஷ்ய கலாச்சார மையம் | பிற்பகல் 2.00

'லூஸியா'வின் பிரம்மாண்ட வெற்றியைத் தொடர்ந்து பவன் குமார் எடுத்து வெளியிட்ட படம்தான் 'யூ டர்ன்'. படத்தின் நீளம் இரண்டே மணி நேரங்கள்தான். பாடல்கள் இல்லை. ஒரு முக்கியமான சமூகப் பிரச்சினையை எடுத்துக்கொண்டு அதைச் சுற்றி ஒரு சுவாரஸ்யமான கதையை எழுதியிருக்கிறார் பவன் குமார்.

படத்தில் கையாளப்பட்டுள்ள அந்த முக்கியமான பிரச்சினை என்ன என்பதை நீங்கள் திரையரங்கில் பார்த்துக்கொள்ளலாம். இந்தியாவில் எல்லா ஊர்களிலும் நடக்கும் பிரச்சினைதான் அது. வேண்டுமென்றே விதிகளை மீறும் நபர்களால், அவர்களுக்குச் சற்றும் சம்பந்தம் இல்லாத நபர்கள் எப்படிப் பாதிப்படைகிறார்கள் என்பதே படத்தின் கரு.

பொதுவாக, த்ரில்லர்களை எழுதி இயக்குவதில் இருக்கும் மிகப் பெரிய பிரச்சினை, படம் பார்ப்பவர்களுக்கு அடுத்து வரும் சம்பவங்களை யூகிக்க இடம் கொடுத்துவிடுவதுதான். பல த்ரில்லர்களில், வில்லன் யார், கொலைகள் எப்படி நடக்கின்றன போன்ற விஷயங்கள் எல்லாமே எளிதில் யூகிக்கப்பட்டுவிடுகின்றன. அதிலும் பவன் குமார் நன்றாகவே தேறியிருக்கிறார்.

ஒரு சிறிய முடிச்சு, அது அவிழும்போது அதைவிடப் பெரிய முடிச்சு, அதைத் தெளிவாக்கும்போது இன்னொரு மிகப் பெரிய முடிச்சு என்று படிப்படியாக வரும் திருப்பங்கள் சுவாரஸ்யமானவையே. இவற்றோடு, உணர்வுகளுக்கும் நல்ல முக்கியத்துவம் அளித்திருப்பதால், கிட்டத்தட்ட படம் முழுக்கவுமே, இருக்கையின் நுனியில் அமர்ந்திருக்கும் அனுபவமே ஏற்படுகிறது. எங்குமே இழுவை இல்லாமல், ஆரம்பத்திலிருந்து இறுதிவரை படிப்படியான சிக்கல்கள் மூலம் நம்மைத் திரையரங்கில் மிகுந்த கவனத்துடன் படம் பார்க்க வைத்திருப்பதே பவன் குமாரின் வெற்றி.

நம்மூரில் வெளியான மிஷ்கினின் 'பிசாசு' படத்துக்கும் 'யூ டர்'னுக்குமே ஓரளவு தொடர்பு உண்டு. 'யூ டர்ன்' பார்த்தால் இதைப் புரிந்துகொள்வீர்கள்.

யூ டர்ன், அவசியம் திரையரங்கில் நாம் அனைவரும் பார்க்க வேண்டிய ஒரு படம். இதில் பேசப்படும் கரு அப்படிப்பட்டது. இந்தியாவில், விதிகளை மீறுவதை ஜாலியாகச் செய்பவர்கள் நாம் அனைவரும் என்பதாலும் இப்படத்தை அனைவரும் பார்க்க வேண்டும். அப்போதுதான், விதிகளை மீறுவதன் பாதிப்புகள் கொஞ்சமாவது நமது மனங்களில் ஒட்டும்.


கருந்தேள் ராஜேஷ்

## இன்று என்ன படம் பார்க்கலாம்? - tamil.thehindu.com பரிந்துரைகள்

### SAND STORM ஐனாக்ஸ் 3 | இரவு 7.00 மணி



தெற்கு இஸ்ரேலின் கிராமம் ஒன்றில, ஜலிலா விசித்திரமான விழா ஒன்றை நடத்துகிறாள். தனது கணவனுக்கும், தன்னை விட இளமையான ஒரு பெண்ணுக்கும் நடக்கும் திருமணமே அது. தனக்குள் பொங்கிக் கொண்டிருக்கும் அவனமானத்தை அடக்கிக் கொண்டே வேலைகளை கவனிக்கும் ஜலிலாவுக்கு, தன் மகள் லைலா வேறு இனத்தைச் சேர்ந்த ஒருவரை காதலிப்பதும் தெரியவருகிறது. தனக்கு நேரும் கொடுமையையும், தன் மகளின் செயலையும் அடக்கி மறைத்து வைக்கிறாள் ஜலிலா. ஆனால் கட்டுப்பாடற்ற இளம் லைலாவுக்கோ தன் வாழ்க்கை தன் கையில் தான் உள்ளது என நினைக்கத் தோன்றுகிறது.

### THINGS TO COME பெலாஸோ | பிற்பகல் 2.30 மணி



பாரிஸ் நகரில் உள்ள மேல்நிலைப் பள்ளியில் தத்துவம் பயிற்றுவிக்கிறார் நேதாலி. அவரது வேலை மீது அவருக்கு அளப்பரிய காதல். எப்போது நேரத்தை சிந்தனைகளுக்காக செலவிடுவார். திருமணமான அவருக்கு இரண்டு குழந்தைகளும் இருக்கின்றன. அவருடைய நேரத்தை குடும்பத்துக்கும், முன்னாள் மாணவர்களுக்காகவும், அப்புறம் அவரது தாயாருக்காகவும் திட்டமிட்டு சரிசமமாக செலவிடுகிறார். ஒரு நாள் நேதாலியின் கணவர் அவரைப் பிரிகிறார். அந்தத் தருணத்தை சுதந்திரம் கிடைத்ததாக உணர்கிறாள் நேதாலி. அவளுடைய வாழ்க்கையின் தேடலில் இறங்குகிறாள்.



### UNITED STATES OF LOVE ஐனாக்ஸ் 2 - மாலை 4,30 மணி

1990. போலந்தில் காற்று மாறி வீசத் தொடங்குகிறது. பரவசமிக்க விடுதலையான முதலாம் ஆண்டு, ஆனாலும் எதிர்காலம் பற்றிய எதையும் நிச்சயமாக சொல்லமுடியாது. வெளிப்படையான மகிழ்ச்சிமிக்க 4 பெண்கள் வெவ்வேறு வயதுடையவர்கள். தங்கள் வாழ்க்கை மாற்றத்திற்கான நேரத்தை தீர்மானிக்கிறார்கள். தங்கள் மகிழ்ச்சியைப் பெறுவதற்காகவும் ஆசைகளை பூர்த்திசெய்துகொள்வதற்காகவும் உறவுச் சிக்கல்களுக்கு இடையே போராடுகிறார்கள்.